**தலைப்பு 289 – ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தித்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூன் 03 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

  எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) இந்த அறிக்கையின் 1.6.3 (அ) (iv) பந்தியில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாகவும்

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.1, 1.6.6(ஆ), 1.6.8 (ஆ)(iv), 2.2(ஆ), 2.3(அ), 2.4(அ) (ஆ), 3.10(அ)(இ), 3.11(இ)(ஈ), 3.12 ஆம் பந்திகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்கன் தொடர்பாக முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதும் அத்தேவைப்பாடுகளிலிருந்து விலகி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 64,099,072 ஆன கட்டுநிதி மீதிக்கு கட்டுநிதி கணக்ஒன்ற சரியாக தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் சரியாக கட்டுநிதி சீராக்க கணக்கொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 271/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தற்போது கட்டுநிதி சீராக்க கணக்கொன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. |

### 1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் 2(ii) செலவின கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள செலவின மீதிகள் மற்றும் ஒன்றிணைந்த பரீட்சை மீதியில் குறிப்பிடப்பட்ட பெறுமதிகளுக்கு இடையே செலவின விடயங்களுக்குரிய ரூபா 23,750,362 ஆன வேறுபாடு காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக திறைசேரியின் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் செயற்பாட்டு பிரிவிலிருந்து விசாரித்து தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | திரட்டிய பரீட்சை மீதியின் பிரகாரம் ஏனைய திணைக்களத்தினால் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திற்காக மேற்கொண்ட செலவினங்களின் கூட்டுதொகை ரூபா 26,934,623 ஆக இருந்த போதும் கட்டுநிதிக் கணக்கில் அது ரூபா 27,328,899 என ரூபா 394,276 ஆல் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகள் காணபிக்கப்பட வேண்டும். | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கட்டுநிதிக் கணக்கு தயாரிக்கப்பட்டதுடன் அது தானியங்கி சீராக்க கணக்கொன்றாக இருப்பதாகவும் அதன் பிரகாரம் வேறுபாடொன்று இல்லையெனவும் அறவிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | நிதிச் செயலாற்றல் கூற்றில் முற்பணக் கொடுப்பனவு ரூபா 46,596,451 ஆக இருந்த போதும் எஸ்ஏ 52 திறைசேரி அட்டவணையின் பிரகாரம் பெறுமதி ரூபா 41,891,725 ஆக இருந்தமையால் ரூபா 4,704,726 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | நிதிச் செயலாற்றல் கூற்றின் ஏசீஏ – 5 கொடுப்பனவு செய்யப்பட்ட முற்பண கணக்கின் பெறுமதி ரூபா 46,596,451 ஆக இருந்ததுடன் அத்தொகை நிதிச் செயலாற்றல் கூற்றில் சரியாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட அட்வணையின் பிரகாரம் வைப்புக் கணக்குகளுக்குரிய ஆண்டில் மொத்த செலவு வைத்தல்களின் கூட்டுத்தொகை ரூபா 10,278,261 தொகை மற்றும் ஆண்டில் மொத்த வரவு வைத்தல்களின் கூட்டுத்தொகை ரூபா 15,455,559 ஆக இருந்தது. வைப்புக் கணக்குகளில் மேற்கொண்ட வரவு மற்றும் செலவு மீதிகளைக் கருத்திற் கொள்ளாமல் பணமாக மேற்கொண்ட பெறுமதி மாத்திரம் கருத்திற் கொள்ளப்பட்டு இருந்த காரணத்தினால் செலவு வைத்தல்களாக ரூபா 9,543,706 | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகள் காட்டப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது வைப்புக் கணக்கிற்கு குறுக்கு பதிவுகளிலிருந்து செய்யப்பட்ட வரவு மற்றும் செலவுப் பெறுமதிகள் உள்ளடக்கப்பட வில்லையென அறியத் தருகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் வரவு வைத்தல்களாக ரூபா 14,679,450 நிதிச் செயலாற்றல் கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருந்தமை அதன் பிரகாரம் வரவு மீதி ரூபா 776,109 மற்றும் செலவு மீதி ரூபா 734,454 குறைத்து பதிவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (உ) | திரட்டிய பரீட்சை மீதி மற்றும் எஸ்ஏ/30 மாதிரியின் பிரகாரம் வைப்புக் கொடுப்பனவுகளின் பெறுமதி ரூபா 15,455,559 ஆக இருந்த போதும் கட்டுநிதி சீராக்க கணக்கிற்கு மேற்படி மீதிகளுக்கு இடையே வேறுபாடாக ரூபா 14,679,450 தொகை மாற்றப்பட்டிருந்தது. | அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | பணமாக செலவு செய்யப்படும் வைப்புக்கள் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் குறுக்குப் பதிவுகள் மூலம் கொடுப்பனவு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. |

## 1.6.3 நிதி நிலைமை தொர்பான கூற்று

கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட ஏசீஏ6 நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்ட இறுதிப்பெறுமதி மற்றும் அதற்குரிய கணனி அட்டவணை இலக்கம் எஸ் 82 இல் குறிப்பிடப்பட்ட 4 சொத்துக் குறியீடுகளுக்குரிய ரூபா 19,624,882 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | வேறுபாடுகளுக்கு காரணங்கள் இனங்காணப்பட்டு சரியாக கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். | கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களில் ரூபா 60,000 ஆன பெறுமதி நிகழ்ச்சித்திட்டத்தில் தவறுதலாக பூர்த்தி செய்யப்படாத வேலை (WIP) இன் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அது இதனை சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட ஏசீஏ 06 நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்ட இறுதி பெறுமதி மற்றும் ஏஸ்ஏ 80 கணனி அச்சிட்டு நிதியல்லாத சொத்துக்கள் பொழிப்பில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கு இடையே 3 சொத்து வகுதிகளுக்குரிய ரூபா 3,533,810 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | - மேற்படி - | மேற்படி (i) இன் பிரகாரம் சரிப்படுத்தல்கள் மூலம் வேறுபாடு நீக்கப்படுமென அறிவிக்கப்பிடப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான ஏசீஏ 06 கூற்றில் குறிப்பிடப்பட்ட கொள்வனவுப் பெறுமதி மற்றும் ஏஸ்ஏ82 கணனி அச்சிடல் குறிப்பில் உள்ளடக்கப்பட்ட பெறுமதிக்கு இடையே 03 சொத்து வகை வகுதிக்குரியதாக ரூபா 3,529,310 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | மேற்படி (i) இன் பிரகாரம் சரிப்படுத்தல்கள் மூலம் வேறுபாடு நீக்கப்படுமென அறிவிக்கப்பிடப்பட்டுள்ளது. |
| (ஈ) | நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் ஆரம்ப மீதி முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட்ட இறுதி மீதிக்கு இடையே 06 சொத்துக் குறியீடுகளுக்குரியதாக ரூபா 1,132,014,116 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | வேறுபாடுகளுக்கு காரணங்கள் இனங்காணப்பட்டு சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 திசெம்பர் 31 இல் காணப்பட்ட மீதிகள் பூச்சியமாக்கப்பட்டு மீண்டும் சிகாஸ் பெறுமதிகளை உள்ளடக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் இவ்வேறுபாடு ஏற்பட்டதாக அறிய தருகின்றேன். |
| (உ) | நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பெறுமதி ரூபா 1,089,762,966 ஆக இருந்த போதிலும் ஏஸ்ஏ 82 கணனி அட்டவணையின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 1,086,169,166 ஆக இருந்ததால் ரூபா 3,593,800 ஆன வேறுபாடு காணப்பட்டது. | - மேற்படி - | 2019 திசெம்பர் மாதம் கணக்கு தீர்வு செய்யப்பட்டதன் பின்னர் 2020 சனவரி கணக்கு பொழிப்பில் சீராக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஊ) | நிதிக்கூற்றுக்ளில் ஏசீஏ – 06 நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றின் பிரகாரம் ஆண்டின் கொள்வனவு பெறுமதி ரூபா 11,372,877 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ஏசிஏ 2(II) செலவின கூற்றில் அது ரூபா 12,792,257 என காண்பிக்கப்பட்டிருந்தமையால் வேறுபாடு ரூபா 1,419,380 ஆக இருந்தது. | -மேற்படி- | ஆண்டின் இறுதியில் நிதி ஏற்பாடு மீதிக்கு அல்லது குறித்த செலவினத் தலைப்பில் செலவினங்களுக்கு உள்ளடக்கப்படா மையால் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் ஆண்டின் கொள்வனவுப் பெறுமதி ரூபா 11,372,877 என குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (எ) | நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஒதுக்க பெறுமதி ரூபா 1,089,762,966 ஆக இருந்த போதிலும் ஏஸ்ஏ 90 கணனி அட்டவணையின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 1,086,169,166 ஆக இருந்ததால் ரூபா 3,593,800 ஆன வேறுபாடு காணப்பட்டது. | - மேற்படி - | 2019 திசெம்பர் மாதம் கணக்கு தீர்வு செய்யப்பட்டதன் பின்னர் 2020 சனவரி கணக்கு பொழிப்பில் சீராக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 1.6.4 முற்பணக் கணக்குகள் மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| திணைக்கள பதிவேடுகளின் பிரகாரம் திரட்டிய விரிவான பரீட்சை மீதியில் முற்பண பெறுவனவுகள் ரூபா 44,644,630 ஆக இருந்ததுடன் எஸ்ஏ 52 திறைசேரி அட்டவணையின் பிரகாரம் பெறுவனவுகள் ரூபா 41,891,725 ஆக இருந்தது. வேறுபாடான ரூபா 2,752,905 மாத்திரம் கட்டுநிதி சீராக்க கணக்கிற்கு மாற்றவதற்கு பதிலாக ரூபா 46,596,451 மாற்றப்பட்டிருந்தது. | சரியாக கட்டுநிதி சீராக்க கணக்கொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். | முற்பணத் தொகையில் கொடுப்பனவு கட்டுநிதி சீராக்க கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 1.6.5 கட்டுநிதி மீதி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் முதல் 04 மாதங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டுநிதி எல்லையை மிகைத்து ரூபா 109,900,000 ஆன கட்டுநிதி கோரப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 08 மாதங்களுக்கான அவ்வாறு கூடுதலாக கோரப்பட்டிருந்த கட்டுநிதி பெறுமதி ரூபா 163,966,000 ஆக இருந்தது. | மதிப்பீடு சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | மீண்டும் மீண்டு கோரப்பட்டதால் இவ்வாறு இரண்டு முறை பதிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 1.6.6 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

திணைக்களத்தினால் (பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டது. விபரம் வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | தாவரங்கள் பதிவேடு விளைச்சல் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | 2015 ஆகஸ்ட் 05 ஆந் திகதிய 2/2015 ஆம் இலக்க திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் தாவரங்கள் பதிவேடொன்று நாளதுவரையாக பேணப்பட வேண்டும். | 2/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் தாவரங்கள் பதிவே டொன்றை பராமரிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடங்கிய பிணைகள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உள்ளடங்கும் விதத்தில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான பிணைகள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | பிணை வைப்பதற்காக உரிய பிணைப் பதிவேடொன்று தயாரிப்பதற்காக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. |
| (இ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் அன்றாடம் பரீட்சிக்க கூடிய வகையில் பொருப்புக்கள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | புதிய சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் அறிக்கை பொறுப்புக்கள் பதிவேடாக பயன்படுத்துவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 1.6.7 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

---------------------------------------------

கீழே காட்டப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 81,318,461 தொகை கணக்கு விடயமொன்றும் ரூபா 1,578,355 தொகையான சேதங்கள் மற்றும் நட்டங்கள் சம்பவங்கள் 2 உமாக அட்டவணை மற்றும் கோவைகள் போன்ற சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்விற்குத் தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்ட சான்றுகள் வழங்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது.. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஏற்றுமதிக்காக தேன் உற்பத்தி இயலளவை அதிகரிப்பதற்கு செயற்படுத்தப்பட்ட தேன் வளர்ப்பு செயற்திட்டம் கேகாலை, அனுராதபுரம் மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் செயற்படுத்தப் பட்டிருந்தது. இதற்காக 632 தேன் பெட்டிகள், 153 புகை கூண்டுகள் 63 திஸ்காரைகள் வழங்கப்பட்டிருந்த போதும் தேன் சமூகங்களின் அளவு, தேன் அளவு போன்ற தகவல்கள் சரியாக பேணப்படாமையால் அச் செயற்திட்டத்தின் செயலாற்றல் மதிப்பீட்டிற்கு உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | செயற்திட்டத்தின் செயலாற்றல் மதிப்பீட்டிற்கு உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் சரியாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | அவதானிப்புக்கள்<br>இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (அ) 2003 இன் 23 ஆம் இலக்க விதை சட்டம் | | தனியார் நாற்று மேடையாளர்களால் பதிவினை வருடாந்தம் பதிவினை புதுப்பிக்க வேண்டிய போதிலும் 32 தனியார் நாற்று மேடையாளர்களால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. | விதை சட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருடாந்தம் விதை சட்டத்தின் கீழ் பதிவினை பூர்த்தி செய்ய வேண்டுமென அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை<br>--------------------------------------- | | | | |
| (i) VII ஆம் அத்தியாயத்தின் iv ஆம் பிரிவு | 14,687,765 | மேலதிக நேர வேலைகளுக்காக உரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு எந்தவொரு வழியுமில்லாத விசேட சந்தர்ப்பங்கள் மற்றும் சாதாரண வேலைகளுக்கு புறம்பாகவும் அவசரமானதும் சாராண அலுவலக வேலைகளில் நிறைவேற்ற முடியாத வேலைகளுக்காக மாத்திரம் பணமானது ஒதுக்கீடு செய்ய முடியுமாக இருந்த போதும் திட்டமிடப்பட்ட வருடாந்த பாதீட்டு நிதிஏற்பாட்டிற்கு நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் ஏனைய செலவின விடயங்களிலிருந்து நிதிஏற்பாட்டை மாற்றிக்கொண்டு மேலதிக நேர வேலை மற்றும் விடுமறை தினப் படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. 33 உத்தியோக விடுதிகள் தொடர்பாக சிக்கனமற்ற வாடகை அடிப்படையாக கொண்டிருந்த போதிலும் அதற்கு அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திணைக்களத்தின் செயலாற்றலை ஆக்கபூர்வமாகவும் எதர்பார்த்த வகையிலும் மேற்கொள்வதற்காக மேலதிக நிதிஏற்பாடான ரூபா 2,200,000 தொகைக்காக நிதிப்பிரமாணம் 66 இன் ீழ் ஏனையசெலவின விடயங்களிலிருந்து நிதிஏற்பாட்டை மாற்றிக்கொண்டு பிரகாரம் திறைசேரி அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) xix ஆம் அத்தியாயத்தின் 4.3.3 உப பிரிவு | - | தலைமை அலுவலகத்தின் அரசின் வீடுகள் தொடர்பாக ஒவ்வொரு விண்ணப்பத்தையும் காத்திருக்கம் பட்டியலில் பதிவுசெய்து ஆகாரமான தகவல்கள் முறைமையொன்று பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அரசின் வீடுகளின் பொறுப்பு உரிய மாவட்ட பணிப்பாளர்களுக்கும் ஆராய்ச்சி நிலையங்களுக்குப் பொறுப்பு பணிபபாளர்களுக்கும் கையளிக்கப்பட்டுள்ளதால் வெளியில் பதிவேடொன்று பேணப்படவில்லை என அறிவிக்கப் பட்டிருந்தது. |
| (iii) xix ஆம் அத்தியாயத்தின் 5.6. ஆம் பிரிவு | - | 2019 ஆம் ஆண்டின் போது திணைக்களத்திற்குச் சொந்தமான 89 வீடுகளில் 60 வீடுகளுக்கு சிக்கன வாடகை அறவிடப்பட்டு வந்ததுடன் வாடகையை தீர்மானிப்பதற்காக பிரதான மதிப்பீட்டாளரின் அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே 60 வீடுகளில் 44 வீடுகளுக்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டிருந்தது. |
| (iv) xix ஆம் அத்தியாயத்தின் 6.1.1 உப பிரிவு | | ஏதேனும் பதவியொன்றுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடொன்று தவிர ஏனைய சகல விடுதிகளின் குத்தகை காலம் 05 ஆண்டு காலமாக இருந்த போதிலும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 33 | - மேற்படி - | உடன்படிக்கை காலப்பகுதியை நாளது வரையாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | உத்தியோகத்தர்கள் ‘ ஊழியர்கள் தொடர்ந்தும் அரச வீடுகளில் குடியிருந்தனர். | | |
| (v) | xix ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவு | 899,725 | வெவ்வேறு காரணங்கள் அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தாத 15 உத்தியோகத்தர்கள் / ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன்தொகை தொடர்பாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி – | ஊழியர்கள் ஓய்வு பெற்று ஆனால் சேவையில் ஈடுபடுத்துதல் மற்றும் ஓய்வு பெறுதல் தொடர்பாக உள்ள விடயத்திற்குரிய விடயத்தின் பிரகாரம் ஓய்வுதிய பணிக்கொடை தாமதத்தின் பேரில் அறவிடுவதற்கு முடியாதிருந்ததுடன் தற்போது சேவையை விட்டுச்சென்று உள்ள வேலை இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளை அறவிடுவதற்காக சட்ட ஆலோசணை அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்கு உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | அதி விசேட வர்த்தமானி பத்திரம் | - | ஒவ்வொரு அரசின் உத்தியோகத்தரும் இடமாற்றங்களுக்கு உட்பட வேண்டிய போதிலும் மாவட்ட செயலகத்தின் 28 உத்தியோகத்தர்கள் 05 ஆண்டுகள் முதல் 25 வரை நீண்டகால ஒரே சேவை நிலையத்தில் சேவை செய்து வந்தனர் | இடமாற்றங்களுக்கு உட்பட்டு நடவடிக்கை எடுகக வேண்டும். | திணைக்களப்படுத்திய பதவிகளுக்காக திணைக்கள இடமாற்ற சபை மூலம் கடமை நிலைய இடமாற்றமொன்று எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட உள்ளதாக அறிவிக்கப் பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் கோவையின் ---------------------------- | - | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 11 | 12,045,964 | பிரயாணச் செலவின அதிகரிப்பிற்காக காரணங்கள் முழுமையாக தெளிவுபடுத்தப்பட வேண்டியதுடன் அவ்வாறான தெள்வு படுத்தலோ அல்லது இடமளித்தோ இல்லாமல் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தேவையான நிதிஏற்பாடு நி.பி 66 இன் பிரகாரம் எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது |
| (ii) | நிதிப்பிரமாணம் 104(2) | - | வாகன நட்ட சேதங்கள் தொடர்பான விபரங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | உரிய படி செயற்படுமாறு விடயத்திற்குப் பொறுப்பான உததியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (iii) | நிதிப்பிரமாணம் 105, 109(1) மற்றும் 2014 மார்ச் 26 ஆந் திகதிய சீஎப்/ஆர்ஈடீ/2014/ அரச நிதிச் சுற்றறிக்கை | 11,725 | 2019 ஏப்ரல் 03 ஆந் திகதி விபத்திற்குட்பட்ட வாகனங்கள் தொடர்பான இறுதி அறிக்கை 2002 பெப்ரவரி 18 ஆந் திகதி வரையிலும் | - மேற்படி - | உரிய வகையில் செயற்படுவதற்கு விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் படாதிருந்ததுடன் சாரதியிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய நட்டத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | து. |
| (iv) | நிதிப்பிரமாணம் 187(3) | 289,762 | பணத்தை பொறுப்பேற்கும் அலுவலகங்களுக்கு கிடைக்கும் தொகை தொடர்பாக நாளாந்தம் அல்லது இயலுமான வரை தாமதமின்றி வங்கி கணக்கிற்கு அனுப்ப வேண்டிய போதிலும் 04 மத்திய நாற்று மேடைகளின் பணத்தை 05 நாட்களுக்கு இடைப்பட்ட காலம் தாமதித்து வங்கியிலிடப்பட்டிருந்தது. | - மேற்படி - | உத்தியோகத்தர் களின் பிரயாண தேவைப்பாட்டின் பேரில் இடம்பெற்றிருந்த துடன் எதிர் காலத்தில் சரிப்படுத்துவதாக அறிவிக்கப் பட்டிருந்தது |
| (iv) | நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) | 319,693 | ஏதேனும் விசேட செயற்பாடொன்றிற்காக பதவிநிலைத்தர உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 100,000 ஆன உயர் அளவு செயல்நிமித்த கட்டுநிதியொன்று வழங்குவதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு முடியும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்நிதிப் பிரமாணத்திற்கு இணங்காமல் 02 சந்தர்ப்பங்களில் முற்பணம் வழங்கப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (vi) | நிதிப்பிரமாணம் 571(2) | 167,400 | 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 02 வைப்பு மீதிகள் தொடர்பாக முறையாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | -மேற்படி - | நிதிப்பிரமாணம் 571(2) இன் பிரகாரம் அரசின் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (vii) | நிதிப்பிரமாணம் 1646 | - | வாகன ஓட்டக் குறிப்புக்கள் குறித்த மாதம் முடிவடைந்து 15 நாட்கள் கடப்பதற்கு முன்னர் திணைக்கள தலைவர் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்க வேண்டிய போதிலும் தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் திணைக்களத்தற்குரிய 07 வாகனங்கள் தொடர்பாக ஓட்டக் குறிப்புக்கள் தாமதமாக சமர்ப்பிக்கப் பட்டிருந்தன. | -மேற்படி - | எதிர்காலத்தில் குறறைபாடுகள் இடம்பெறாமல் இருக்க ஆலோசணை வழங்கப்பட்டுள்ளதுடன் அனைத்து சாதரிகளின் மேலதிக நேரம், பிரயாணச் செலவினக் கொடுப்பனவின் போது ஓட்டக் குறிப்புகளை சமர்ப்பிக்கும் வரை கொடுப்பனவு இடை நிறுத்தப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது . |
| (உ) | திறைசேரி செயற்பாட்டு சுற்றறிக்கை<br>----------------------------------------<br>2015 யூலை 24 ஆந் திகதிய 243/2015 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 5.4 ஆம் பந்தி | 323,423 | வைப்புக்கள் வகைக்கு உரித்தாக்க முடியாத போது புதிய வைப்பு வகையொன்றையும் இலக்கத்தையும் வழங்க முடியுமாக இருந்த போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதன் பின்னர் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

(உ) திறைசேரி சுற்றறிக்கை

---------------------------------------

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | 2015 யூலை 24 ஆந் திகதிய 04/2015 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை | - | சகல அரசின் வாகனங்களும் காப்புறுதி செய்யப்பட வேண்டிய போதிலும் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 11 குழாம் வாகனங்களுக்காக காப்புறுதி நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி - | |
| (ii) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | - | அரசின் வாகனங்களுக்காக ஒவ்வொரு 12 மாதங்களுக்கு ஒருமுறை அல்லது 25,000 கி.மீ தூரம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டதன் பின்னர் வரும் சந்தர்ப்பத்தில் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக வாகனங்களுக்கு எரிபொருள் எரிவு பரிசோதனை இடம் பெற்றிருக்கவில்லை. | -மேற்படி - | நிதிஏற்பாடு கிடைப்பனவின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதாகவும் ஓட்ட நிலைமையில் காணப்படும் வாகனங்களுக்காக உரிய பரிசோதனை மேறகொள்ளபப்டுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் மத்திய நாற்றுமேடை அலுவலகத்திற்கு கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு மீளாய்வாண்டின் போது பொதுத் திறைசேரியால் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 4,900,000 நிதி ஏற்பாட்டினை எவ்வித செயற் பாடுகளுக்காகவும் பயன்படுத்தாமல் 08 மாதங்களாக விளைவற்ற வகையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | நிதி ஏற்பாடுகளை முடியுமான வரை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். | தமது தேவைகளைக் கருத்திற் கொண்டு நிறுவனத்தினால் சரியாக திட்டங்களை உரிய நேரத்தில் தயாரிக்கப்படவில்லை எனவும் நிதிஏற்பாடுகள் தாமதமாக மேற்கொள்ளப்பட்டதால் 2019 செப்தம்பர் 11 ஆந் திகதி வரை ஆரம்பிக்கப்படவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 2.2. செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திடமிருந்து நாட்டின் பொது மக்களுக்கான சேவைக்கு பங்களிப்பினை விடவும் இந் நிறுவனத்தை நடாத்திச் செய்வதற்கான செலவிடப்பட்ட பராமரிப்பு கிரயம் கூடுதலான மட்டத்தில் உள்ளதாக இருப்பதால் ரூபா 563 மில்லியன் ஆன மூலதன பணத்தை கையாளுவதற்காக ரூபா 658 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | மூலதனச் செலவினங்களுக்கு ஒப்பாக மீண்டெழும் செலவினத்தை மேற்கொள்வதற்காக பார்த்துக்கொள்ளல் வேண்டும் | ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் இலங்கை அரசு மற்றும் பொது மக்களுக்கும் தேவையான பொருளாதார மற்றம் சமூக நலன்களை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சித்திட்டங்கள் வெளிக்கள நிகழ்ச்சித் திட்டங்களாக இருந்ததுடன் அலுவலகங்களில் கொடுப்பனவு காசேடு இல்லாமையால் குறித்த நிகழ்ச்சித்திட்டங் களுக்காக முற்பணம் |

| | | | |
|---|---|---|---|
| | | | வழங்கப்பட்டிருந்ததுடன் அந்நிகழ்ச்சித்திட்டங்கள் கூடிய காலப்பகுதியில் செயற்படுத்தப்பட்டமை. |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 04 இன் பிரகாரம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி அந்த நிதியாண்டிற்குள் நிறைவேவற்ற முடியுமான நிகழ்ச்சித்திட்டமொன்றுக்கு மட்டுப்படுத்தவதாக சான்றுதி உறுதிப்படுத்தல் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 21 செலவின விடயங் களுக்குரியதாக ரூபா 257,222,586 அதாவது 6 சதவீதம் முதல் 78 சதவீதம் வரையான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செலவின முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். | திறைசேரி செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் மற்றும் திறைசேரியிடமிருந்து கிடைக்கும் நிதிஏற்பாடுகளின் பிரகாரம் மூலதன கடப்பாடுகளுக்காக திசெம்பர் மாதத்தின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | 2019 யூலை 17 ஆந் திகதிய 04/2019 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் II இன் பிரகாரம் மின்சாரம் மற்றும் நீர் செலவினத்தில் 5 சதவீத சேமிப்பொன்றை ஏற்படுத்தும் நோக்கில் அதற்காக நடவடிக்கை எடுப்பது தொடர்பாக பொறுப்பினை வகிக்கும் உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்டு அது தொடர்பாக மாதாந்தம் ஆராய்ந்து பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை காரணமாக 5 சதவீத் சேமிப்பு தொடர்பாக கவனத்திற் கொள்ளாமல் ரூபா 6,252,619 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திணைக்களம் முழு நாட்டிற்கும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மூலதன நிதி ஏற்பாடுகளில் 25 சதவீதம் சேமிக்கப்பட வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் 11 செலவின விடயங்களுக்குப் சேமிப்பு சதவீதம் 0.6 முதல் 9.2 சதவீதமான வீச்சில் காணப்பட்டது. | - மேற்படி - | அவதானிப்புடன் இணங்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (உ) | 2019 யூன் 17 ஆந் திகதிய 04/2019 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 02 (iv) பந்தியின் பிரகாரம் எழுதுகருவிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் தேவைப்பாட்டு செலவின விடயத்தின் கீழ் வரும் செலவினங்களை முடியுமான வரை குறைக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும் அவ்வாறு கவனம் செலுத்தப்படாமல் ரூபா 5,003,011 ஆன செலவினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மேற்படி - | திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2019 திசெம்பர் 24 ஆந் திகதிய 07/2019 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் 02 செலவின விடயங்களுக்குரிய செலவின முகாமைத்துவம் செய்யப்பட்ட காரணத்தினால் சேமிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சுற்றறிக்கையின் பிரகாரம் 02 செலவின விடயங்களுக்குரிய செலவின முகாமைத்துவம் செய்யப்பட்ட காரணத்தினால் சேமிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சுற்றறிக்கையின் பிரகாரம் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு சீராக்கப்பட்டதன் பின்னரும் ரூபா 1,147,687 ஆன அதாவது 05 சதவீதம் முதல் 21 சதவீதம் வரையான வீச்சில் சேமிக்கப்பட்டிருந்தது. | மேற்படி - | மேற்படி - |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 94(2) இன் ஏற்பாடுகள் பின்பற்றப்படாமல் 289-2-2-0-1202 செலவின விடயத்திற்குரிய சேமிப்பினை மிகைத்து ரூபா 16,638 ஆன பொறுப்புகளுக்கு கடப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இதற்குப் பின்னர் நிதி ஏற்பாடுகளை மிகைத்து பொறுப்புகளுக்கு உட்படுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 இல் சிகாஸ் இற்கு உட்படுத்தப்பட்டிருந்த எனினும் கொடுப்பனவு செய்யப்படாத பட்டியல்களின் பெறுமதி ரூபா 160,779,689 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 155,818,430 என ரூபா 4,961,259 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஒவ்வொரு ஆண்டிலும் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்திற்கு உள்ளடக்கப்படுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 2.4 முற்பணங்களை வழங்குதலும் தீர்வு செய்தலும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செயல் நிமித்த கட்டு நிதி திட்டவட்டமான செயற்பாட்டிற்காக பயன்படுத்த வேண்டிய போதிலும் 08 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொண்ட ரூபா 224,750 தொகையான முழு முற்பணமும் பயன்படுத்தப்படாமல் 08 நாட்கள் முதல் 44 இற்கு இடைப்பட்ட காலமாக நிறுத்தி வைக்கப்பட்டு மீண்டும் தீர்வு செய்யப்பட்டிருந்தது. | சரியான மதிப்பீடு ஒன்றுடன் முற்பணத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏதேனும் விஷேட கட்டுநிதி குறித்த செயற்பாட்டிற்காக வழங்கப்படும் செயல் நிமித்த கட்டுநிதி செயற்பாடு முடிவடைந்தவுடன் 14 நாட்களுக்குள் தீர்வு செய்யுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திட்டவட்டமான மதிப்பீடொன்று தயாரிக்கப்படாமல் முற்பணத் தொகை பெற்றுக்கொண்டதன் காரணமாக 43 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 1,528,840 கூட்டுத்தொகையான செயல் நிமித்த கட்டுநிதி மற்றும் சில்லறை காசு தீர்ப்பனவில் போது செலவிடப்படாத ரூபா 435,908 தொகை நிறுத்தி வைக்கப்பட்டு தீர்வு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி - | ஏதேனும் விஷேட எதிர்பார்க்காத நிலைமையொன்றின் போது துணை கட்டுநிதி செலவிடப்படாமல் காணப்பட்டதுடன் அவ்வாறான நிலைமையினை தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்குமாறு |
| (இ) | சரியாக மதிப்பீடு தயாரிக்கப்படாமையால் 17 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 578,280 கூட்டுத்தொகையான செயல் நிமித்த கட்டுநிதியை மிகைத்து ரூபா 147,286 கூடுதலாக செலவிடப்பட்டு பின்னர் மீள் நிரப்பப்பட்டிருந்தது. | - மேற்படி - | சில நடைமுறைச் சிக்கலான நிலைமையின் கீழ் எதிர்பார்த்த மதிப்பீட்டை மிகைத்து செல்லும் சந்தர்ப்பங்களில் மிகைகள் மீள் நிரப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 2.5 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் மற்றும் திணைக்கள பதிவேடுகளின் பிரகாரம் வைப்பு மீதிகளுக்குரிய இடையே ரூபா 31,749 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | வேறுபாடுகள் இனங்காணப்பட்டு தீர்வு செய்வதற் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட வைப்புக்கணக்கின் வேறுபாடு வருடக் கணக்காக காணப்பட்டதுடன் வேறுபாடு இனங்காணப்பட்டு சீர் செய்யப்பட்ட போதும் புதிய சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் அது சீராகக்ப்படாமையால் எதிர்காலத்தில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 2.6 வங்கிக் கணக்குகளைச் செயற்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதிப் பிரமாணம் 395(இ) பிரகாரம வங்கிக் கணக்கிணைக் கொண்டுள்ள ஒவ்வொரு திணைக்களத்தினாலும் ஒவ்வொரு முடிவடைந்து அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கி இணைக்கக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதும் 08 மாதங்களில் வங்கி இணைக்கக்கூற்றுக்கள் உரிய திகதிகளில் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது குறிக்கப்பட்ட திகதிகளில் வங்கி இணைக்கக்கூற்றுக்கள் உரிய திகதிகளில் தயாரிக்கப்பட்டுளள்தாக அறிய தருகின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொலை நோக்கு மற்றும் செயற்பணி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் பிரதான செயற்பாடொன்றை ஏற்றுமதி விவசாய சேவைகள் உற்பத்தி மற்றும் நடுகை பொருள் இறக்குமதியை கட்டுப்படுத்த வேண்டிய போதிலும் 11 ஏற்றுமதி பயிர்களுக்குரிய இறக்குமதி அதிகரிப்பு 04 சதவீதம் முதல் 8900 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | இறக்குமதியை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடுகைப் பொருள் கட்டுப்படுத்தல் இடம்பெறவில்லையென அறிக்கையிடப்பட்டிருந்தது. |
| (ஆ) 2017 யூலை 25 ஆந் திகதி 2/2017 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளின் விளைவுகள் தெளிவாக இணங்காணக்கூடிய வகையில் குறைந்தது. 03 வெளியிட்டு காட்சிகளாவது பதிவேடுகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லையென அறிக்கையிடப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிறுவனத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளின் பெறுபேறுகள் மற்றும் தொடர்புடைய பிரதான செயலகத்தில் குறிகாட்டி (KPI) ஆகக் குறைந்தது 3 ஆவது வெளியிடப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

**3.2 திட்டமிடல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க திறைசேரி செயலாளரின் அரச நிதிச் சுற்றறிக்கையின் 2(அ) பந்தியனி பிரகாரம் ரூபா 44,529,417 தொகையான மூலதன செலவினங்களுக்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டில் இருந்து அனைத்து நிதிஏற்பாடுகளுக் கும் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டிற்கு நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் அமைப்பு கட்டமைப்பு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போது சேவையிலுள்ள பதவியணியினர் தொடர்பான விபரங்கள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | 2020 இலிருந்து விபரங்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | ஏற்றுமதி விவசாய பயிற்சி ஆராய்ச்சி மற்றும் ஒன்றினைந்த நோய் மற்றும் பீடைகொல்லி - முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தபட்ட 03 செயற்பாடுகளுக்குரிய நிதி ஏற்பாடு ரூபா 8,000,000 ஆக இருந்ததுடன் அரச கொள்கைகளுக்கு இணங்க நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்ததன் பின்னரும் செயன் முன்னேற்றம் | - மேற்படி - | மூலதன செலவின கொடுப்பனவிற்காக போதியளவு பணம் கிடைக்காமை கட்டளை இடப்பட்ட பொருட்கள் தாமதமாக கிடைத்தமை போன்ற காரணங்களால் சேமிப்பு இடம் பெற்றதாக அறியப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | 29 சதவீதம் முதல் 68 சதவீதம் வரையான குறைந்த மட்டத்தில் காணப்பட்டதால் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் கிடைக்காமல் இருந்தன. | | |
| (ஈ) | சேவை வழங்கலின் செயலாற்றல் மற்றும் தரத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கருவா தொடர்பாக உலகளாவிய குறிகாட்டியை தாபிப்பதற்காக ரூபா 16,500,000 நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த 02 செயற்பாடுகள் நிறை வேற்றப்பட்டிருக்கவில்லை. | ஆண்டில் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். | பொது திறைசேரியினால் விநியோகிக்கப்படும் சுற்றறிக்கையின் பிரகாரம் சேமிப்புக்கள் இடம் பெற்றிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (உ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க திறைசேரி செயலாளரின் அரச நிதிச் சுற்றறிக்கைக்கு இணங்காத வகையில் முன்னைய ஆண்டின் பட்டியல்களுக்கு கொடுப்பனவாக ரூபா 4,562,399 பெறுமதியொன்று ரூபா 20,000,000 ஆன நிர்வாக செலவினமொன்று உள்ளடக்கப்பட்டு செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்த நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டு புதிய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் முன்னைய ஆண்டின் கடப்பாடுகள் மற்றம் கொடுப்பனவுகள் உள்ளடக்கப்பட்டு ரூபா 20,000,000 ஆன நிர்வாக செலவினமொன்று உள்ளடக்கப்பட்டு செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. |

### 3.3 செயற்பாடுகளை நிறைவேற்றாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| புதிய பயிர் செய்கை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 10 வகையான பயிர்களை பயிரிடுவதற்கு அறிமுகப்படுத்தப்பட்டிருந்த பொதும் தெரிவு பரிசோதனையின் பிரகாரம் மாத்தறை மற்றும் அநுராதபுரம் ஏற்றுமதி விவசாய மாவட்ட அலுவலகத்தின் பிரதேசங்களில் கருவா மற்றும் மிளகு மாத்திரம பயிரிடப்பட்டிருந்தமை. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் ஏனைய பயிர்களுக்குரிய காரணிகள் இனங்காணப்பட்டு பயிரிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விவசாய காலநிலை வலயங்களின் பிரகாரம் பயிர்ச்செய்கையாளர்களின் வேண்டுகோள் போன்ற விடயங்கள் அடிப்படையில் பொருத்தமான பயிர்ச் செய்கை திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

## 3.4 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தை பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1978 ஆம் ஆண்டின் கலப்பு பயிரிடல் மாதிரியொன்றாக ஆரம்பிக்கப்பட்ட மலை நாட்டு ஆராய்ச்சி நிலையத்திற்கு சொந்தமான 12.5 ஏக்கர் பரப்பளவு காணப்பட்டது. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலா பிரயாணிகளை – கொண்டு வாசனைத் திரவியத்தின் --- ஆராய்ச்சி நிலையத்தை அபிவிருத்தி செய்தல், வாசனைத் திரவியங்களுடன் அண்மித்த சுற்றுலா செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக நியமங்கள் மற்றும் வழிகாட்டிகளை தயாரித்தல், வாசைன திரவியங்களுடன் அண்மித்த சமூக அடிப்படையிலான விவசாய சுற்றுலா வர்த்தகத்தை இலங்கைக்கு அறிமுகப்படுத்தல் அதற்காக விவசாயிகள் உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களை பயிற்றுவித்தல் மற்றம் வாசனை திரவிய பயிர்களை அடிப்படையாக கொண்ட உற்பத்திகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் விற்பனை போன்ற நோக்கங்கள் அடையப் பெற்றிருக்கவில்லை. | நிறுவனத்திடம் உள்ள வளங்களில் இருந்து உச்ச பயனை பெற்றுக் கொள்ளும் பொருட்டு வாசனைத் திரவிய பூங்கா அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். | 2011 ஆம் ஆண்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட போதும் நிதி ஏற்பாடு கிடைக்காமை காரணமாக எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை பூர்த்தி செய்ய முடியாமல் இருந்ததுடன் நிதி ஏற்பாடுகளை மேற்கொண்டு எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | மத்திய நாற்று மேடைக்கு சொந்தமான காணி 1.94 ஏக்கராக இருந்ததுடன் பயிரிடக்கூடிய இலக்கினை 155000 நாற்றுக்கள் வரை அதிகரிக்க கூடியதாக இருந்த போதும், 2019 ஆம் ஆண்டின் இலக்காக 104000 நாற்றுக்கள் மாத்திரம் வழங்கப்பட்டு 80488 மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டின் சம்பளமாக ரூபா 3,524,112 மற்றும் மின்சாரச் செலவினமாக ரூபா 22,466 செலவிடப்பட்டிருந்தது. | பரப்பளவின் பிரகாரம் பயிர் உற்பத்தியை மேம்படுத்த வேண்டும். | எதிர்காலத்தில் கிடைக்கும் நிதி ஏற்பாடு அடிப்படையில் இயலளவை அதிகரித்து செயற்திறன் தன்மை மற்றும் நாற்றுக்கள் உற்பத்தியை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மத்திய நாற்று மேடைக்கு 3 ஏக்கர் 3 ரூட் 22 பேர்ச் சொந்தமாக இருந்த போதிலும், 6 வகைப் பயிர்களுக்காக மாத்திரம் 215000 நாற்றுக்கள் என்ற இலக்கு வழங்கப்பட்டதன் பின்னர் 208,000 நாற்றுக்களாக திருத்தம் செய்யப்பட்டிருந்தது. 162,676 நாற்றுக்கள் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுடன் இதற்காக ரூபா 5,025,348 சம்பளம் அண்ணளவாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | எதிர்பார்த்த இலக்கினை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | எதிர்காலத்தில் கிடைக்கும் நிதி ஏற்பாடு அடிப்படையில் இயலளவை அதிகரித்து செயற்திறன் தன்மை மற்றும் நாற்றுக்கள் உற்பத்தியை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | வீட்டுத்தோட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 18 மாவட்டங்களில் கோப்பி, கொகோவா, வெனிலா, இஞ்சி, மஞ்சள், கராம்பு மற்றும் சாதிக்காய் போன்ற பயிர்களை பயிரிடுவதற்காக நாற்றுக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை | விளைச்சலை அதிகரிப்பதற்கு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பொருந்தக்கூடிய வகையில் பொருளாதார ரீதியாக விளைச்சலை தரக்கூடிய பயிர்களை மாத்திரம் பயிரிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (உ) | (i) 2019 சனவரி 25 ஆந் திகதிய 3/2019/iii ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய பணிப்பாளர் நாயகத்தின் ஏற்றுமதி விவசாய பயிர்ச்செய்கையின் போது விளைச்சலை அதிகரிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை அம்பாறை, அநுராதபுரம், பொலன்னறுவ, நுவரெலியா மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆலோசணைகளின் பிரகாரம் அனைத்து மாவட்டங்களிலும் நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | - மேற்படி - |
| | (ii) நுண் நீர் வழங்கல் மூலம் காலநிலை தாக்கங்களை தவிர்ப்பதற்கான அலகுகளை நிறுவும் நிகழ்ச்சித்திட்டங்களை 07 மாவட்டங்களில் செயற் படுத்தாமல் இருந்ததுடன் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படாத 4 மாவட்டங்களில் பிரிவுகளை நிறுவுதல் 0 சதவீதத்திலிருந்து 60 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | - மேற்படி - | சகல தேவைப்பாடுகள் மற்றும் விதந்துரைகளுக்கு இணங்காத முறைமைகளுக்காக கொடுப்பனவு செய்யப்படவில்லையென அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | விவசாய மற்றும் பீடை கொல்லி சேதத்தை குறைப்பதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்திய 03 மாவட்டங்களின் செயன் முன்னேற்றம் 0 சதவீதம் முதல் 63 வீதம் வரையான வீச்சில் காணப்பட்டதுடன் 07 மாவட்டங்களில் நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | சேதன பசளைக் கிராமங்கள்<br>------------------------------------------------- | | |
| (i) | 2019 சனவரி 25 ஆந் திகதிய 03/2019/14 ஆம் இலக்க திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் சேதனப் பசளை கிராமங்களை நிறுவுவதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் காணப்படும் கேள்விக்கு இணங்க திட்டவட்டமான தரத்துடனான உறுதிப்படுத்தப்பட்ட சேதன ஏற்றுமதி விவசாய உற்பத்திகளை சந்தைக்கு வழங்குவதும் இதன் மூலம் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதும் நோக்கமாக கொள்ளப்பட்டிருந்தது. 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து விவசாயிகள் இரசாயன பசளைகளை பயன்படுத்தாமல் பயிரிடும் சாதிக்காய், கோப்பி, கராம்பு, மிளகு பயிர்கள் சேதன பயிர்ச்செய்கையாக கருதி 10 கிராமங்களுக்காக ரூபா 1,500,000 செலவிடப்பட்டு சர்வதேச உறுதிப்படுத்தலொன்று வழங்கப்பட்ட போதும், அவ்விளைச்சலுக்காக சர்வதேச சந்தையொன்று கிடைக்காமையால், சந்தையில் பொதுவான விலையில் உற்பத்திகள் விற்பனை செய்யப்படுவதால் சேதன பசளை கிராமங்களுக்காக | சேதன பசளை கிராமங்களை தாபிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உற்பத்திகள் சிறிய அளவுகளில் விற்பனை செய்யப்பட்டுள்ளன. காணப்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு நிலைமை அடிப்படையில் எதிர்பார்த்த இலக்கினை அடைந்து கொள்ள முடியாதிருந்ததாக அறிக்கையிடப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்றுமதி விவசாய திணைக்களங்கள் செலவிடப்பட்ட செலவினங்களின் பெறுபேறுகள் எதிர்பார்த்த மட்டத்தை அடையப் பெற்றிருக்கவில்லை. | | |
| (ii) | தனசவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு போகத்திற்காகவும் வீட்டுத் தோட்டத்தை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதும், 02 மாவட்டங்களுக்குரிய, கராம்பு, வெனிலா, மஞ்சள், கொரக்கா, பங்கிரி, கொக்கோ மற்றும் சாதிக்காய் போன்ற பயிர்களுடன் வீட்டுத்தோட்டத்தை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தனசவிய நிகழ்ச்சித்திட்டத்தை ஒவ்வொரு பயிருக்காகவும் செயற்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பொருந்தக்கூடிய வகையில் பொருளாதார ரீதியாக விளைச்சலை தரக்கூடிய பயிர்களை மாத்திரம் பயிரிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 3.5 எதிர்பார்க்கப்பட்ட நலன்களை (Outcome) பெற்றுக்கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தனியார் நிறுவனமொன்றின் மூலம் சேதனப் பசளை கிராமங்களை உறுதிப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கண்டி மாவட்டத்தை 04 கொத்தனி கிராமங்களுக்காக ரூபா 791,805 செலவிடப் பட்டிருந்தது. சேதனப் பசளை உறுதிப்படுத்தல் தாமதமாக வழங்கிய காரணத்தினால் உறுதிப்படுத்தல் வழங்கிய திகதி மற்றும் சான்றிதழ் வழங்கும் காலத்திற்கு விலகல் ஓராண்டினை விட குறைவாக இருப்பதால் விவசாய அமைப்புக்களுக்கும் தமது | எதிர்பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சேதன ஏற்றுமதி கம்பனிகளை நேரடியாக கிராமங்களுக்கு தொடர்புபடுத்துவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | உற்பத்திகளை விற்பனை செய்வதற்கும் செலுத்திய பணத்திற்கு ஈடாக பெறுபேறொன்றை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | | |
| (ஆ) | மேற்படி செயற்திட்ட அறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் சேதனப் பசளை கிராம நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய புதிய காணியில் பயிரிடும் இலக்கு மீளாய்வாண்டின் இறுதியில் 200 ஹெக்டேயர் (ஏக்கர் 500) ஆக இருந்த போதும், அதன் செயன்முன்னேற்றம் பூச்சியமாக இருந்தது. பயிரிடப்பட்ட விவசாயிகள் சேதன பயிர்ச்செய்கைக்குரிய தொடர்புபடும் இலக்கு 3750 ஏக்கராக இருந்த போதும், 2017 ஆம் ஆண்டில் 09 மாவட்டங்களின் கீழ் 537.5 ஏக்கர் காணி மற்றும் 2018 ஆம் ஆண்டின் போது 532.63 ஏக்கர் காணி சேதன பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. அவ்வாறே, சேதன பயிர்ச்செய்கை ஏற்றுமதியாளர்களின் விபரங்கள் உள்ளடக்கப்பட்ட தரவு முறைமையொன்று வடிவமைக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிதி வரையறைகள் காணப்பட்டமை மிளகு விலை குறைவடைதல் போன்ற விடயங்கள் தாக்கமளித்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது |
| (இ) | 2019 சனவரி 25 ஆந் திகதிய 2019/1(1)i ஆம் இலக்க பணிப்பாளர் நாயகத்தின் திணைக்களச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் இஞ்சி மற்றும் மஞ்சள் என்பன சேதன பயிர்ச்செய்கையாக கொத்தனி கிராம முறைமைக்கு (Cluster village) பயிரிடுவதற்கு நடவடிக்கை | எதிர்பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | அடுத்த ஆண்டில் வழங்கப்படும் நிதிஏற்பாடு வரையறைக்குள் ஏனைய --- காணப்படும் பிரதேசங்களில் விரிவாக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டபோதும், 17 மாவட்டங்களில் மீளாய்வாண்டில் ஒரு மாவட்டத்தில் மாத்திரம் 26.78 ஹெக்டேயரும் இரண்டு மாவட்டங்களில் இஞ்சி 6.32 ஹெக்டேயர் போன்ற குறைந்த அளவில் பயிரிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 2019 ஏப்ரல் 24 ஆந் திகதிய 3/5/36 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் திணைக்களப் பணிப்பாளரின் கடிதத்தின் பிரகாரம் ஏற்றுமதி கிராமங்களை உருவாக்குவதன் மூலம் ஏற்றுமதி பயிர்ச்செய்கைக்கு முன்னுரிமை வழங்கி ஏற்றுமதி கிராமங்களை ஸ்தாபிக்க வேண்டிய போதிலும் மாத்தறை, நுவரெலியா, குருணாகல் மாவட்டங்களில், மிளகாய், கறுவா, பாக்கு, கோப்பி, சாதிக்காய் போன்ற கலப்பு பயிர்களை பயிரிடுவதற்கு நடவடிக்கை எடுத்ததன் பேரில் ஒரு ஏற்றுமதி பயிராக முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கம் நிறை வேற்றப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி - | விவசாயிகளின் வேண்டுகோளின் பிரகாரம் ஏனைய நாற்றுக்கள் வழங்கப்பட்டதுடன் மாவட்டத்திற்கு உரியதாக முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. |
| (உ) | இரண்டு உதவிப் பணிப்பாளர் அலுவலகங்களுக்காக நாற்றுக்களை பகிர்ந்தளிப்பதற்காக 41 ஏக்கர், 01 ரூட் 37 பேர்ச் உடன் கூடிய மத்திய நாற்றுமேடை தொடர்பாக ஆராய்ச்சியொன்று மேற்கொண்டு காலநிலை காரணிகளை இனங்கண்டு நாற்றுக்கள் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், 2016 ஆம் | -- மேற்படி - | நாற்றுக்கள் கொட்டில்அமைத்து நாற்றுக்கள் உற்பத்தியை படிப்படியாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை தொட்டிகளுக்கு உட்படுத்தப்பட்ட அளவு 90 சதவீதம் முதல் 23 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. நாற்றுக்கள் உற்பத்தியும் 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை 130 சதவீதத்திலிருந்து 25 சதவீதம் வரை குறைவாக காணப்பட்டது. | | |
| (ஊ) | மத்திய நாற்று மேடையொன்றினை 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 37,000,000 ஆன மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்ட போதும், 2020 ஆம் ஆண்டு வரை மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட 03 உருப்படிகள் தவிர எஞ்சிய அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதற்கு நிறுவனம் தவறியிருந்தது. | மதிப்பீட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கிணறு நிர்மாணிக்கப்பட்டு நீர்ப்பம்பி பொருத்தப்பட்டுள்ளதுடன் 60 X 18 அடி அளவிலான 07 நாற்றுக் கொட்டில்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. 4500 கன அடி அளவிலான களஞ்சியமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (எ) | மத்திய நாற்றுமேடையில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு நாற்றுக்கள் உற்பத்தியை அதிகரிப்பதற்காக 03 ஏக்கர் வழங்கப்பட்டிருந்தன. எனினும், 2005 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை 02 பயிர்களுக்குரியதாக மாத்திரம் ஆராய்ச்சி செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | எதிர்பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆராய்ச்சி பத்திரங்கள் வெளியிடப்பட்டுள்ளதுடன் ஆராய்ச்சிகளை மேற் கொள்வதற்கு உரிய பரப்பளவினை அதிகரிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஏ) | தொழில்நுட்ப வெளியீடுகள் மூலம் தொழில்நுட்ப புதிய அறிவினை விவசாய சமூகத்திற்கு வழங்கப்பட வேண்டிய போதிலும், 19 தொழில்நுட்ப பிரசுரங்கள் அளவில் மெதுவாக மற்றும் | தேவைப்பாடு இனங்காணப்பட்டு கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டும் | தொழில்நுட்ப பிரசுர இருப்புக்களை உயர் மட்டத்தில் வைக்கப்படுமென அறிக்கையிடப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| வழங்கப்படாத தொழில்நுட்ப வெளியீடுகளில் 1277 ஆன மீதியொன்று காணப்பட்டது. 03 ஆண்டு களுக்குரியதாக வெளியீடு கள் வழங்கப்படும் அளவிற்கு ஒப்பாக தொழில்நுட்ப பிரசுரங்களை பேணிச் சென்ற காரணத்தினால் தொழில்நுட்ப பிரசுரங்களை சந்தைப்படுத்த முடியாத நிலைமையொன்று காணப்பட்டது. | | |

## 3.6 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டமை

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 10,834,035 தொகையான 12 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய திட்டத்தின் அடிப்படையில் குறித்த காலத்திற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் கிடைக்கின்ற நலன்களின் மூலம் பொதுமக்களுக்கு ஆகக் கூடிய சேவையொன்றை வழங்கும் வகையில் செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கட்டுப்படுத்த முடியாத காரணங்களின் அடிப்படையில் செயற்திட்டம் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் 2020 இன் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3.7 செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2019 நவம்பர் 22 ஆம் திகதிய ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் விவசாய போக தரவு முறைமை யொன்று மென்பொருளில் பூர்த்தி செய்யப்பட்டு 2019 திசெம்பர் | எதிர்பார்த்த பிரகாரம் குறித்த காலப்பகுதியில் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும். | சேவர் கணனி துணைப் பொருளை பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 24 ஆம் திகதிக்கு முன்னர் திணைக்களத்திற்கு கையளிக்குமாறு மென்பொருள் உற்பத்தி நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2020 மே மாதம் வரையிலும் இந்த மென்பொருள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கவில்லை | | |

**3.8 நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயல்முன்னேற்றங்களைப் பெறாதிருந்த செயற்திட்டங்கள்.**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் செரப்பீஸ் நாற்று பண்ணை அலுவலக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 4,000,000 தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. 2019 ஏப்ரல் மாதத்தின் போது கட்டிட திணைக்களத்திற்கு சரியான நிதி ஏற்பாடு தொகை அறிவிக்கப்படாமல் நிர்மானத்திற்குரிய திட்டம் தயாரிப்பதற்கு கையளிக்கப்பட்டிருந்த துடன் 2019 நவம்பர் 15 ஆம் திகதி வரையிலும் இந்த நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. | மதிப்பீடு மற்றும் குறித்த மாதிரிகளின் பிரகாரம் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் உடன்படிக்கை செய்யப்பட்ட காலத்தில் செயற்திட்டங்கள் செயற்பாட்டிற்கு கொண்டுவரப்படல் வேண்டும். | தாமதம் ஏற்பட்டிந்ததுடன் 05/2019 இன் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி ஏற்பாடுகள் நிறுத்தி வைக்கப்பட்டதன் அடிப்படையில் அமுல்படுத்தப்படாதிருந்ததாக கட்டிட திணைக்களம் அறிவித்துள்ளது. |
| (ஆ) புதிய பயிற்செய்கை நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 142,110,000 தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டு ரூபா 86,650,000 தொகையான செலவினம் செய்து 17 மாவட்டங்களில் 1,312 ஹெட்டேயர் பரப்பளவிற்காக 8408440 நாற்றுக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது எனினும் சரியாக திட்டம் தயாரிக்கப்படாமையின் காரணமாக அந்த 17 | பயிரிடப்படாத பயிர்செய்கைகள் தொடர்பாக ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொண்டு கால நிலைகளை இனங்கண்டு பயிர் செய்வதற்கு இலக்குகள் வழங்கப்பட வேண்டும். | காலநிலை நிலைமை மற்றும் சந்தை தகவல்களை கவனத்தில் கொண்டு ஏற்றுமதி போக பயிர்ச் செய்கைகளின் இலக்குகள் மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

மாவட்டங்களிலும் சாதிக்காய், கராம்பு, கொக்கோவா, கோப்பி போன்ற ஏற்றுமதி போகப் பயிற்செய்கைக்காக இலக்கொன்று வழங்கப்பட்டிருக்க வில்லை.

## 3.9 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்திற்குரிய முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது பூர்த்தி மட்டங்கள் செயலாற்றல் குறிகாட்டிகள் மற்றும் அதன் பிரகாரம் எதிர்பார்த்த பூர்த்தி மட்டத்தில் அடையப்பட்டுள்ள பூர்த்தியின் சதவீதம் விளக்கமாக காண்பிப்பதற்கு பதிலாக செயலாற்றல் குறிகாட்டிகளாக 8 குறிகாட்டிகள் காண்பிக்கப்பட்டிருந்தது. | செயலாற்றல் குறிகாட்டிகள் மற்றும் பூர்த்தி என்பன தெளிவாக இனங்கண்டு காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 08 செயலாற்றல் குறிகாட்டிகள் காண்பிக்கப்பட்டிருந்த துடன் அதன் பிரகாரம் முதலாவது, மற்றும் இரண்டாவது செயலாற்றல் குறிகாட்டிகளுக்காக பூர்த்தி மட்டம் 94 சதவீதம் மற்றும் 100 சதவீதம் என காண்பிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2020 மே 28 ஆம் திகதிய PED/RED/REG/02/CC/01 ஆம் நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் திறைசேரி செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் திணைக்களத்தால் 2020 யூன் 30 இல் உள்ளவாறு மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2020 யூலை 22 ஆம் திகதி வரையிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | புதிய படிவத்தின் 02, 04, 05 பந்திகளுக்குரிய வரைவு அறிக்கை அமைச்சின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

**3.10 பெறுகைகள்**

--------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.10.1 வழிகாட்டியின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பான விபரங்கள் இணையதளத்தில் பிரசுரிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களம் வழங்குகின்ற ஒப்பந்தம் தொடர்பான விபரங்கள் ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் இணைய தளத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இரண்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 500,000 தொகைக்கு மேற்பட்ட நிர்மாணங்கள் மற்றும் பழுதுபார்த்தல்கள் தொடர்பான தகவல்கள் இணையதளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.2(இ) வழிகாட்டியின் பிரகாரம் விரைவாக வேலை நிறைவேற்றுதல் மற்றும் பொருட்கள் சேவைகளை வழங்கும் பெறுகை நடைமுறையின் நோக்கமாக இருந்த போதிலும் மீளாய்வாண்டிற்குரிய பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,542,000 பெறுமதியான ஒப்பந்தம் மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்படாது 2020 ஆம் ஆண்டு வரையும் ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | தனியார் நிறுவனமொன்றின் மூலம் தேவையான துணைப்பாகங்களை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தமையின் அடிப்படையில் காலம் நீடிக்கப் பட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 வழிகாட்டியின் பிரகாரம் ஆகக் குறைந்தது மூன்று வருடங்களுக்காக எதிர்பார்த்த பெறுகை நடவடிக்கைகள் விரிவாக உள்ளடக்கி பெறுகை நிறுவனத்தினால் பிரதான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன், ஒவ்வொரு வருடத்திற்காக மாத்திரம் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. | 03 வருடங்களுக்கு தயாரிக்கப்படாதிருந்தமையினால் அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | விவசாய பயிற்செய்கை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய பிரதான பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுளள்து. |
| (ஈ) | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.3 வழிகாட்டியின் பிரகாரம் சகல தொடர்புடைய செலவினங்களும் திட்டமிடப்பட்ட மொத்த கிரய மதிப்பீடு தயாரிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் பெறுகை தீர்மானங்களுக்கு இணங்காத வகையில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டமையினால் ரூபா 1,868,480 தொகையான நிதி ஏற்பாடு குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடந்த ஆண்டில் அறிவித்தல்களுக்காக செலவினம் செய்யப்பட்ட தொகை தற்போது காணப்படுகின்ற பெறுமதியை கவனத்தில் கொண்டு இலக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் நிதி ஏற்பாட்டிற்கு அண்மித்த பெறுமதியில் செலவினங்கள் செய்யப்பட்டிருந்ததுடன் சேமிப்பு குறை பயன்பாடாக காண்பிக்கப்பட்டுள்ளது. |
| (உ) | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.2(இ) வழிகாட்டியின் பிரகாரம் விரைவாக வேலைகளை நிறைவேற்றுதல் என்ற நோக்கம் தொடர்பாக பெறுகை நடைமுறையில் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | முடியாதிருந்ததன் அடிப்படையில் மீளாய்வாண்டிற்குரிய துண்டுப் பிரசுரங்கள் அச்சிடுவதற்காக வழங்கப்பட்ட ரூபா 1,000,000 தொகையான நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாமல் ஆண்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.4 வழிகாட்டியின் பிரகாரம் வேலைகளுக்காக முற்பணமாக செலுத்தக் கூடிய ஆகக் கூடிய எல்லை ஒப்பந்த தொகையில் 30 சதவீதமாக இருந்த போதிலும், ஏற்றுமதி விவசாயப் போக தரவு முறைமை தயாரிக்கும் கேள்விற்குரிய ஒப்பந்த பெறுமதி ரூபா 1,505,000 தொகையாக இருந்த போதிலும் (பெறுமதி சேர் வரி தவிர) மேற்கூறப்பட்ட எல்லையினை கவனத்தில் கொள்ளாது ரூபா 624,975 தொகை அதாவது, 41 சதவீதம் செலுத்தப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் அவ்வாறான பிரிவொன்று உள்ளடக்கப்பட்டிருக்காமையினால் அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உடன்படிக்கையின் பிரகாரம் 60 சதவீதம் செலுத்த முடியுமாக இருந்த போதிலும் 41 சதவீதம் செலுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (எ) | முற்பணம் விடுவிக்கும் போது ஏற்றுக்கொள்ளக் கூடிய முற்பண செலுத்துதலுக்காக காப்புறுதியொன்று சமர்ப்பிக்கும் அடிப்படையில் அந்த முற்பணம் விடுவிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான காப்பீடொன்று பெறப்படாமல் ரூபா 624,975 தொகை விடுவிக்கப்பட்டிருந்தது. | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உடன்படிக்கையின் பிரகாரம் மென்பொருள் தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் 60 சதவீதம் ஆகக் கூடியதன் அடிப்படையில் செலுத்துவதற்கு முடியுமாக இருந்த போதிலும், 41 சதவீதம் மாத்திரம் செலுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

**3.11 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தில் காணப்படுகின்ற அரசாங்கத்தின் 89 வீடுகளில் அரசாங்கத்தின் 07 வீடுகள் பாவனைக்கு எடுக்கப்படாதிருந்ததுடன் அந்த வீடுகளில் 06 வீடுகள் உடைந்த நிலையில் காணப்பட்டதன் காரணமாக பல வருட காலமாக இந்த வீடுகள் பயனற்று காணப்பட்டது. | அரசாங்கத்தின் வீடுகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உடைத்து அகற்றுவதற்கு அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்திற்கு அனுப்புதல், பழுதுபார்த்தலுக்கு மதிப்பீட்டை பெற்றுக் கொண்டு அனுப்புதல் போன்ற செயற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | திணைக்களத்திற்கு சொந்தமான 86 வாகனங்களில் 10 வாகனங்கள் வருடம் முழுவதும் ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | வாகனங்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பழுதுபார்த்தலுக்காக அனுப்புதல், பழுதுபார்த்தலுக்காக நிதி ஏற்பாடு காணப்படாமை, சாரதிகள் வெற்றிடம் காணப்படாமை பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளல் ஆக்கபூர்வமனதாக இல்லாதிருந்தமை போன்ற விடயங்கள் காண்பிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. |
| (இ) | நிறுவனத்திற்கு சொந்தமான 11 வாகனங்களின் உரித்து ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் பெயரில் கையேற்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 சனவரி மாதத்தின் போது அந்த வாகனங்களை கையேற்பதற்காக கோரப்பட்ட கடிதம் அனுப்பப்பட்டிருந்தும் கணக்காய்வு திகதி வரையிலும் அந்த வாகனங்களின் உரித்து மாற்றப்படாதிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | திணைக்களத்திற்கு சொந்தமான ஏனைய தரப்பினர்களால் பயன்படுத்தப்படுகின்ற 442 ஏக்கர் அளவான 38 காணிக் கூறுகள் முறையாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை பாதுகாத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 37 காணிக் கூறுகள் அளவில் கையேற்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

**3.12 அரசாங்கத்தின் உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விவசாய, கிராமிய பொருளாதார அலுவல்கள், கால்நடை வள அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் நீர்வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் 2019 சனவரி 16 ஆம் திகதிய எம்பீஜ/02/05/06 56 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் பிணை வைத்தல் அங்கீகரிக்கப்பட்ட போதும் நிதிப் பிரமாணம் 880 இன் பிரகாரம் விஞ்ஞான சேவையில் 67 உத்தியோகத்தரினால் ரூபா 670,000 பெறுமதியான பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இரண்டாம் மட்டத்தில் உள்ள 142 உத்தியோகத்தர்களும் முதலாம் மட்டத்தில் 96 உத்தியோகத்தர்களும் பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிணை வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3.13 நட்டம் மற்றும் இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 05 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடையே ரூபா 2,400,000 பெறுமதியான 01 சம்பவமும் 05 வருடங்களுக்கு குறைவான ரூபா 1,579,413 பெறுமதியான 04 சம்பவங்களுமாக கூட்டுமொத்தமாக ரூபா 3,979,413 பெறுமதியான 05 சம்பவங்கள் 2020 மே மாதம் வரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 2,400,000 நட்டத்தில் ரூபா 225,000 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் ஏனைய சம்பவங்களுக்காக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) 2016 மார்ச் 17 ஆம் திகதிய 01/2016(1) ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பாட்டு வாடகைக் கொள்வனவு திட்டத்தின் கீழ் வாகனங்களை பெற்றுக் கொள்ளும் போது பணிப்பாளர்கள் மற்றும் அதற்கு சமமான மட்டத்தில் உள்ள உத்தி யோகத்தர்களுக்காக பெறப்பட்ட வாகன மொன்றிக்கு பெறுமதி சேர் வரியின்றி ஆகக் கூடிய மாதாந்த வாடகை ரூபா 135,000 ஆக இருக்க வேண்டிய போதிலும், ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் உள்ளடங்கலாக 08 பணிப்பாளர்களுக்கு உரித்தாக்கப்பட்ட வாகனங்களுக்கு பெறுமதி சேர் வரியின்றி மாதாந்த வாடகை ரூபா 163,500 தொகை செலுத்தப்பட்டமையினால் வருடமொன்றுக்கு இந்த 08 வாகனங்களுக்காக ரூபா 2,736,000 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வாகனத்திற்கு உரித்தான உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் 02 வாகனங்கள் குழு வாகனங்களாகவும் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு ஐய வினாவின் பிரகாரம் எதிர்காலத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (இ) மத்திய நாற்று பண்ணைகளில் பயன்படுத்தப்படுகின்ற பாத்திரங்கள் தொடர்பான பௌதீக பரிசோதனையின் போது ரூபா 168,846 தொகை பற்றாக்குறையொன்று காணப்பட்டது. | பற்றாக்குறையொன்று ஏற்படாத வகையில் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) வாடகை அடிப்படையில் மோட்டார் வாகனமொன்றை பெற்றுக் கொள்ளல் தொடர்பாக 2017 ஆம் ஆண்டில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்யையில் 03(ஏ) பிரிவின் பிரகாரம் மாதாந்தம் 3000 கிலோ மீற்றர் உச்ச அளவின் கீழ் ஓடுவதற்காக ஈடுபடுத்த முடியுமாக இருந்த போதிலும், 33 மாத காலத்திற்காக குறைவாக பயன்படுத்தப்பட்ட கிலோ மீற்றர்களின் எண்ணிக்கை 191,731 ஆக இருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா 17,685,189 ஆகும். | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வாகனங்களை பயன்படுத்துகின்ற உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்பட்ட கடமைகளின் பிரகாரம் அத்தியவசிய கடமைகளுக்காக மாதாந்தம் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் 3000 கிலோ மீற்றர் ஓடி இருந்ததாயின் சாரதியுடன் பிரயாணச் செலவினங்கள் மற்றும் மேலதிக செலவினங்களுக்காக மேலதிக செலவினமொன்றை செய்வதற்கு ஏற்பட்டிருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3.14 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பாத்திரங்களை கொள்வனவு செய்யும் தேவையை இனங்கண்டு கொள்வனவு செய்தல் இடம்பெறாமையின் காரணமாக மத்திய நாற்று பண்ணை இரண்டிற்குரிய மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது 03 அளவுகளில் பொலித்தீன் பைகள் 746440 அலகாக காணப்பட்டது. ஆண்டின் போது பயன்படுத்தப்பட்டதன் பின்னர் ஆண்டின் இறுதியில் மீதி 685657 அலகாக அதாவது 92 சதவீதமாக காணப்பட்டது. | பல வருடங்கள் முதல் மீதியொன்று காணப்படாத வகையில் தேவையினை சரியாக இனங்கண்டு கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | ஆண்டின் ஆரம்பத்தின் போத தேவையினை இனங்கண்டு கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் நாற்றுப் பண்ணைகளில் மீதி காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

மேலும் மத்திய நாற்று பண்ணைக்குரிய பொலித்தீன் பைகளின் இரண்டு வகைகள் 2016 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட 63435 அலகு மீதியில் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் மேலும் 43135 அலகுகள் அதாவது 68 சதவீதம் எஞ்சியிருந்தது.

## 3.15 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சரியான முகாமைத்துவம் மற்றும் தீர்மானம் எடுக்கப்படாமையின் காரணமாக திணைக்களத்திற்கு சொந்தமாக 86 வாகனங்கள் காணப்படும் போது 10 வாகனங்கள் வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்தன. தேவையினை சரியாக இனங்கண்டு தேவையான இடங்களுக்காக பொருத்தமான வாகனங்கள் நியமிக்கப்படாமையின் காரணமாக நிறுவனத்தால் ரூபா 61,933,458 தொகை பயனற்ற செலவினம் செய்யப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை சரியானதாக நிறைவேற்றுதல் வேண்டும். | நிறுவனத்திற்காக குழாம் வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டதுடன் நிறுவனத்திற்கு ஆகக் கூடிய நலன்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் பின்னர் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) மத்திய நாற்று பண்ணைக்கு சொந்தமான இறப்பர் மரங்களை குத்தகைக்கு வழங்கும் செயற்பாடுகள் விரைவாக அமுல்படுத்தப்படாமையின் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டில் ரூபா 217,875 தொகையான வருமானமும் 2018 ஆம் ஆண்டின் போது குத்தகைக்கு வழங்குவதற்கு | உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை சரியானதாக நிறைவேற்றுதல் வேண்டும். | குத்தகைக்கு வழங்குவதன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | கூறுவிலை கோராது இருந்தமையினால் அந்த ஆண்டின் வருமானமும் 2019 ஆம் ஆண்டின் வருமானமும் நிறுவனத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2017 மே 07 ஆம் திகதிய 03/2017 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய பணிப்பாளர் நாயகத்தின் திணைக்கள சுற்றறிக்கை (iv) இன் 03 ஆம் பந்தியின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட நபர்கள் பதிவு செய்யப்பட்ட தனியார் நாற்றுப் பண்ணைகளை நிர்மாணிப்பதற்காக 08 பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,080,000 தொகையான நிதி உதவியில் 50 சதவீதம் இரண்டு தவணைகளில் அறவிடப்பட வேண்டிய போதிலும், ரூபா 348,500 தொகையொன்று 2020 சனவரி மாதம் வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நாற்றுக்களை உறுதிப்படுத்தும் போது நிதி உதவிப் பணம் பெற்ற பண்ணையாளர்களுக்கு முன்னுரிமை வழங்கி நாற்றுக்களை உறுதிப்படுத்தி பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தவணை ஒன்றிலோ அல்லது இரண்டிலோ அறவிட வேண்டிய போதிலும் பல தவணைகளிலேனும் பணத்தை அறவிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அமுல்படுத்துதல் தொடர்பாக திணைக்களத்தின் பணிப்பொறுப்புக்கள் தொடர்பாக ஆர்வத்தை காண்பிக்கின்ற தரப்பினர் நிறுவனத்தினால் இனங்காணப்பட்டிருந்த போதிலும் நிறுவனத்திற்குரிய இலக்குகளை தயாரிக்கும் போது, பங்குபற்றுபவர்களுக்கான | திணைக்களத்தின் பணிப் பொறுப்புக்கள் தொடர்பாக ஆர்வத்தை காண்பிக்கின்ற தரப்பினரை பங்குபற்றச் செய்தல் வேண்டும். | தரப்பினர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | உள்நுழைவு தெளிவுபடுத்தப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | எந்தவொரு பணிக்கும் சரியான செயலாற்றல் தரவை அடிப்படையாகக் கொண்டு காணப்படுதல் தேவையாக இருந்த போதிலும், நிறுவனத்தால் நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைதலை அளவீடு செய்வதற்காக சரியான தரவு அடிப்படையொன்றை அமைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தரவு அடிப்படையொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 2018 ஏப்ரல் 27 ஆம் திகதிய 08/65 ஆம் இலக்க நிலை பேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தேசிய மட்டத்தில் தந்திரோபாய முகாமைத்துவ திட்டத்தின் பிரகாரம் நிறுவன ரீதியான, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் அடைந்து கொள்வதற்காக இணைத்துக் கொள்வதற்கு சிரேஷ்ட உத்தியோகத்தர் களின் இருவரின் பெயர் குறிப்பிடப்பட்டு நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 5. நல்லாளுகை

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஏற்றுமதி விவசாய திணைக்களம் மீளாய்வாண்டில் பெறுகை நடவடிக்கைகளுக்காக செலவிடுவதற்கு ரூபா 48,129,000 திட்டமிட்டிருந்ததுடன் உள்ளபடியாக ரூபா 42,731,936 தொகை செலவிட்டிருந்த போதிலும், பெறுகைகள் கணக்காய்விற்காக போதியளவான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் ஆண்டின் போது அது தொடர்பாக 02 உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்கள் மாத்திரம் அனுப்பப்பட்டிருந்தன. | பெறுகை கணக்காய்வு தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். | சிறிய 05 பெறுகை நடவடிக்கைகளும் பிரதான அலுவலகத்திற்குரிய 02 பெறுகை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 5.2 பிரஜை / சேவை பெறுனர்களின் விஞ்ஞாபனம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) 2018 சனவரி 24 ஆம் திகதிய 05/2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட 2008 பெப்ரவரி 06 ஆம் திகதிய 05/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட பிரஜை / சேவை பெறுநர் விஞ்ஞாபனத்திற்கு இணங்க நிறுவனத்தினால் பிரஜை / சேவை பெறுனர் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டு அது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் பிரஜை / சேவை பெறுனரின் விஞ்ஞாபனம் தயாரித்தல் மற்றும் செயற்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டிற்காக நிறுவனத்தினால் திட்ட முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

**5.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 சனவரி 12 ஆம் திகதிய டீஎம்ஏ/1-2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பணிகளுக்காக உத்தேசிக்கப்பட்ட பொது பணிகளுக்கான பரிந்துரைகளில் அனேகமானவை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

**6. மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் பதவியணியினரின் ஒவ்வொரு அங்கத்தவருக்காகவும் வருடமொன்றுக்கு ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படா திருந்ததாக அறிவிக்கப் பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | சந்தர்ப்பமொன்றை உள்ளடக்கி மனித வள திட்டமொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. ஒட்டு மொத்த பதவியணி யினருக்காகவும் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருந்ததுட ன் அது தொடர்பான பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டு சிரேஷ்ட உத்தியோகத்தரும் நியமிக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள மூன்று உத்தியோகத்தர் களுக்கு தாபன விதிக் கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 1.2 ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்படாமல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தின் கீழ் ஆரம்ப கைத்தொழில் அமைச்சிக்கு நியமிக்கப்பட்டு திணைக்கள பணிகளுக்காக மேற்குறிப்பிடப்பட்ட மூன்று உத்தியோகத்தர்களின் பங்களிப்பு ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்படும் போது 2018 சனவரி மாதம் முதல் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் வரை ஏற்றுமதி விவசாய திணைக்களத்தினால் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 4,370,538 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அமைச்சின் மூலம் அந்த பணத்தை மீளளிப்பு செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கா க அங்கீகாரம் ஒன்றைப் பெற்று அமைச்சுக்கு விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முதலாவதாக ஆரம்ப கைத்தொழில் அமைச்சுக்கு நியமிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |